# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க

# நிருவாகத்துக்கான பாராளுமன்ற

# ஆணையாளர் சட்டம்

---

[1981, மார்ச்சு மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1981, மார்ச்சு மாதம் 13 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.30 தபாற் செலவு : சதம் 75

# 1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டம்

[1981, மார்ச்சு மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஓ. 86/79
1292

**அரசியலமைப்பின் 156 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி, திருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஓம்புட்சுமான்) பதவியைத் தாபிப்பதற்கும், அவரது தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் வரைவு செய்வதற்கும், அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும், நடைமுறைக்கு வரும் தேதியும்.

1. இச்சட்டம், 1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், இது, கசற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் சனாதிபதியால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

### ஓம்புட்சுமான்

நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் பதவியைத் தாபித்தல்.

2. நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (இதனகத்துப் பின்னர் "ஓம்புட்சுமான்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒருவர் இருத்தல் வேண்டும்.

நியமனமும், பதவிக் காலமும்.

3. (1) ஓம்புட்சுமான் சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், நன்னடத்தை உடையவராயிருக்கும் காலத்தின்போது அவர் பதனி வகித்தலும் வேண்டும்.

(2) ஓம்புட்சுமான், பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின், உள்ளூர் அதிகார சபையின் அல்லது இவற்றையொத்த வேறு நிறுவனத்தின் உறுப்பினரொருவராக அல்லது அலுவலரொருவராக இருத்தலாகாது.

(3) சனாதிபதியின் எழுத்திலான சம்மதத்துடன் அன்றி, ஓம்புட்சுமான், சம்பளத்துடனான அல்லது சம்பளம் இல்லாததான வேறெப் பதவியையும் வகித்தல் ஆகாது, அல்லது தமது பதவிக்குரிய கடமைகளுக்குப் புறம்பானதும் இலாபம் அல்லது வேதனாதிகள் ஈட்டுவதுமான ஏதேனும் உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ளுதல் ஆகாது, அல்லது கைம்மாறுக்காக எத்தொழிலிலும் ஈடுபடுதல் ஆகாது.

(4) ஓம்புட்சுமானின் சம்பளம் பாராளுமன்றத்தால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் அவரது பதவிக் காலத்தின்போது அச்சம்பளம் குறைக்கப்படுதலாகாது.

(5) ஓம்புட்சுமான் பதவியானது—

(அ) அவர் இறப்பதன்மேல்;

2—எ 52166—6,600 (10/80)

(ஆ) அவர் பதவியிலிருந்து விலகுவதாகச் சனாதிபதிக்கு எழுத்துமூலம் அறிவிப்பதன்மேல் ;

(இ) அவர் அறுபத்தெட்டு வயதினை அடைவதன்மேல் ;

(ஈ) சுகவீனம் காரணமாக அல்லது உடற்பலவீனம் காரணமாக அல்லது மனப்பலவீனம் காரணமாகச் சனாதிபதியினால் அவர் பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மேல் ; அல்லது

(உ) அவரைப் பதவியிலிருந்து அகற்றுமாறு கூறும் பாராளுமன்றத்தின் பிரேரணையின் பின்னர் சனாதிபதியினால் ஆக்கப்படும் கட்டளை மூலம் அவர் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மேல்,

வறிதாதல் வேண்டும்.

(6) ஓம்புட்சுமான், தமது பதவிக்குரிய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் தற்காலிகமாக இயலாதவராயிருப்பின், அக்காலப் பகுதியின்போது ஓம்புட்சுமானுக்குப் பதிலாகச் செயலாற்றுவதற்கென ஓர் ஆளைச் சனாதிபதி நியமிக்கலாம். அத்துடன், அத்தகைய ஆள் அவ்வாறு செயலாற்றும் போது, எல்லா வகையிலும் தாமே ஓம்புட்சுமான் என்றாற் போன்று, இச் சட்டத்தின்கீழ் ஓம்புட்சுமானுக்குள்ள எல்லாத் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் உடையவராயிருத்தல் வேண்டும் என்பதுடன், அவர் அவற்றைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அத்துடன் நிறைவேற்றலாம்.

(7) உயர்நீதிமன்ற அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியொருவரை அகற்றுவதற்கான பாராளுமன்றப் பிரேரணையொன்றைச் சமர்ப்பிப்பதற்கும் நிறைவேற்றுவதற்குமான நடவடிக்கைமுறை, எல்லா வகையிலும், ஓம்புட்சுமானை அகற்றுவதற்கான பாராளுமன்றப் பிரேரணையொன்றைச் சமர்ப்பிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

**பகிரங்க அலுவலர் ஓம்புட்சுமானாக நியமிக்கப்படுகின்ற விடத்து.**

4. ஓம்புட்சுமானாக நியமிக்கப்படுவதற்கு நேர்முன்னர் பகிரங்க அலுவலரொருவராக இருந்த ஒவ்வோர் ஆளும், அத்தகைய ஓம்புட்சுமானின் நியமனம் பயனுறுத்தப்படும்போது, அத்தகைய முன்னைய பதவியை வகிக்காதொழிதல் வேண்டும் :

ஆயின்—

(அ) அத்தகைய பகிரங்க அலுவலர் என்ற தன்மையில் அவருக்கு உளதானவையும், அவருக்கு வந்துறுபவையுமான உரிமைகளை அவர் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அந்த உரிமைகளைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, இச் சட்டத்தின் கீழான அவரது சேவை, பகிரங்க சேவையில் ஆற்றப்பட்ட சேவையென்றாற்போன்று கணிப்பிலெடுக்கப்படுதல் வேண்டும்.

5. ஓம்புட்சுமான் பதவிக்கு நியமிக்கப்படும் ஆளொருவர், சனாதிபதியின் முன்னர், இதற்கான அட்டவணையில் தாப்பட்டுள்ள சத்தியத்தைச் செய்து கீழே ஒப்பமிடும்வரை அல்லது உறுதியுரையை மொழிந்து கீழே ஒப்பமிடும்வரை தமது பதவிக்குரிய கடமைகளை மேற்கொள்ளுதலாகாது.

பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை.

6. (1) இச்சட்டத்தின் கீழான ஏதேனும் புலனாய்வின் நோக்கங்களுக்காகவும் அப்புலனாய்வின் மீது செய்யப்பட வேண்டிய ஏதேனும் அறிக்கையின் அல்லது விதப்புரையின் நோக்கங்களுக்காகவும் அன்றி, ஓம்புட்சுமான் அவர் பதவி வகித்துக் கொண்டிருக்கும்போதும் பதவி வகியாதொழிந்த பின்னரும், அவரது தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் புரிகையிலும் நிறைவேற்றுகையிலும் அவரது அறிவுக்கு எட்டிய எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் இரகசியத்தைப் பேணுதல் வேண்டும்.

இரகசியத்தைப் பேணுவதற்கான கடமை.

(2) இச்சட்டத்துக்குப் பயனளிக்கும் நோக்கத்திற்காகவன்றி, ஓம்புட்சுமான், இச்சட்டத்தின்கீழ் அவரது தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும், புரிகையிலும், நிறைவேற்றுகையிலும் அவரால் பெறப்பட்ட அல்லது அவரது அறிவுக்கு எட்டிய தகவல் எதனையும் தாம் வெளியிடமாட்டாரென, சனாதிபதி முன்னர் சத்தியத்தைச் செய்து கீழே ஒப்பமிட்டாலொழிய அல்லது உறுதியுரையை மொழிந்து கீழே ஒப்பமிட்டாலொழிய அவரது பதவிக்குரிய கடமைகளை மேற்கொள்ளுதல் ஆகாது.

7. ஓம்புட்சுமானாக பதவிவகித்த ஆள் எவரும், சனாதிபதியின் எழுத்திலான சம்மதமின்றி, பகிரங்க அலுவலர் ஒருவராக எந்நேரத்திலும் பதவிவகித்தலாகாது.

ஓம்புட்சுமானாக இல்லாதொழிந்த பின்னர் சம்மதமின்றி, ஓம்புட்சுமான் பகிரங்க பதவி வகித்தலாகாது.

## பாகம் II

## ஓம்புட்சுமானின் பணியாட்டொகுதியினர்

8. (1) சனாதிபதி, ஓம்புட்சுமானின் கலந்தாலோசனையுடன் காலத்துக்குக் காலம் பிரதி ஓம்புட்சுமான் ஒருவரையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிரதி ஓம்புட்சுமான்களையோ நியமிக்கலாம்.

பிரதி ஓம்புட்சுமான்.

(2) ஓம்புட்சுமான், அவர் கைப்பட எழுத்துமூலம், அதனகத்துக் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக, குறிப்பிட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் அல்லது வகுப்பை அல்லது வகுதியைச் சேர்ந்த கருமங்கள் தொடர்பில், இப்பிரிவின்கீழான கையளிப்புத் தத்துவமும் இச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின்கீழ் அறிக்கையொன்றைச் செய்வதற்கான தத்துவமும் தவிர்ந்தவையும் இச்சட்டத்தின்கீழானவையுமான அவரது தத்துவங்களுள், கடமைகளுள் அல்லது பணிகளுள் எதனையும் பிரதி ஓம்புட்சுமான் ஒருவருக்குக் கையளிக்கலாம். அத்தகைய கையளிப்பை எந்நேரத்திலாயினும் ஓம்புட்சுமான் இல்லாதாக்கலாம், வேறுபடுத்தலாம், அல்லது வேறுவகையில் திருத்தலாம்.

(3) பிரதி ஒம்புட்சுமான், ஏதேனும் கருமம் தொடர்பில், தமக்குக் கையளிக்கப்பட்ட ஒம்புட்சுமானின் எல்லாத் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும், கையளிப்புச் சாதனத்தில் உள்ள ஏதேனும் மட்டுப்பாட்டுக்கு அல்லது நிபந்தனைக்கு அமைவாகப் பிரயோகிக்கலாம், புரியலாம், அல்லது நிறைவேற்றலாம்.

(4) இப்பிரிவின் கீழ் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி கையளிக்கப்படுமிடத்து, அத்தகைய கையளிப்பு எவ்வாறிருப்பினும், ஒம்புட்சுமான் அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

(5) பிரதி ஒம்புட்சுமான் ஒருவர் ஒம்புட்சுமானால் தமக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், அத்தகைய ஒம்புட்சுமானால் பதவி வறிதாக்கப்படினும், அத்தகைய ஒம்புட்சுமானின் பதவிக்கு அடுத்துறுபவரால் அத்தகைய கையளிப்பு இல்லாதாக்கப்படும்வரையில், வேறுபடுத்தப்படும்வரையில் அல்லது வேறுவகையில் திருத்தப்படும் வரையில், தொடர்ந்தும் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

(6) மூன்றும், 4 ஆம், 5 ஆம், 6 ஆம், 7 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஒரு பிரதி ஒம்புட்சுமானுக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அறுபத்தைந்து வயதை அடைவதன்மீது பிரதி ஒம்புட்சுமான் ஒருவர் பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

வேறு பணியாட்டொகுதியினர்.

9. (1) ஒம்புட்சுமானும், பிரதி ஒம்புட்சுமான்களும் இச்சட்டத்தின் கீழான அவர்களது தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் உதவுவதற்கும் ஒத்தாசையாயிருப்பதற்கும் அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான அலுவலர்களும் சேவையாளர்களும் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட எல்லா அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் அவர்கள் தொடர்பிலும் 5 ஆம், 6 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய அலுவலர்களும் சேவையாளர்களும் 6 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு ஒம்புட்சுமான் முன்னர் சத்தியத்தைச்செய்து கீழே ஒப்பமிடுதல் வேண்டும் அல்லது உறுதியுரையை மொழிந்து கீழே ஒப்பமிடுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தினால் ஒம்புட்சுமானுக்கு அளிக்கப்பட்டவையும் அல்லது அவர்மீது சுமத்தப்பட்டவையும் அல்லது அவருக்கெனக் குறித்தொதுக்கப்பட்டவையும், 8 ஆம் பிரிவின்கீழான கையளிப்புத் தத்துவமும் 18 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் அறிக்கையைச் செய்வதற்கான தத்துவமும் 20 ஆம் பிரிவின்கீழ் சான்றிதழொன்றை வழங்குவதற்கான தத்துவமும் தவிர்ந்தவையுமான தத்துவங்களுள், கடமைகளுள் அல்லது பணிகளுள் எவற்றையேனும், ஒம்புட்சுமான் பொருத்தமானவையெனக் கருது

கின்றவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாகப் பிரயோகிப்பதற்கான, புரிவதற்கான அல்லது நிறைவேற்றுவதற்கான அதிகாரத்தை ஓம்புட்சுமான் எழுத்திலான சாதனத்தின் மூலம் இப்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு அளிக்கலாம்.

(4) மூன்றும் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட சாதனமொன்றின் பயனாக ஓம்புட்சுமானின் ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப்பதாக, புரிவதாக அல்லது நிறைவேற்றுவதாகக் கொள்ளப்படும் எவரேனும் ஆள், அத்தகைய தத்துவத்தை, கடமையை, அல்லது பணியைப் பிரயோகிப்பதற்கான, புரிவதற்கான அல்லது நிறைவேற்றுவதற்கான தமது அதிகாரத்தின் சான்றாக அத்தகைய சாதனத்தைக் காண்பிக்கும்படி தேவைப்படுத்தப்படும்போது, அவ்வாறு அதனைக் காண்பித்தல் வேண்டும்.

## பாகம் III

### ஓம்புட்சுமானின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்

10. (1) பாராளுமன்ற உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்படும் மனுக்களைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்கென அமைக்கப்பட்ட பாராளுமன்றக் குழுவானது (இது இதனகத்துப்பின்னர் "பொது மனுக்கள் குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பகிரங்க அலுவலர் ஒருவரால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றின், உள்ளூரதிகாரசபையின், அல்லது இவற்றையொத்த வேறு நிறுவனத்தின் அலுவலரால் அடிப்படை உரிமையொன்று மீறப்பட்டுள்ளதென அல்லது வேறு அநீதி இழைக்கப்பட்டுள்ளதென, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் மனு வெளிவிடுகின்றதென கருதுகின்றவிடத்து, குழுவானது அத்தகைய மனுவை, புலனாய்வு செய்து அறிக்கை செய்வதற்கென ஓம்புட்சுமானுக்கு ஆற்றுப்படுத்தலாம். ஓம்புட்சுமானின் பணிகள்.

(2) ஏதேனும் முடிவு, விதப்புரை, செயல் அல்லது செய்யாமை எழுத்தாணைமூலமாக அல்லது வேறுவகையில் ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது வேறு நியாயசபையில் கேள்விக்குட்படுத்தப்படலாகாது என ஏற்பாடு செய்யும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில், எது எவ்வாறிருப்பினும், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ், ஓம்புட்சுமான் ஏதேனும் கருமத்தின்மீது புலனாய்வுசெய்து அறிக்கை செய்யலாம்.

(3) இப்பிரிவில் "அநீதி" என்பது (அமைச்சரொருவருக்குச் செய்யப்படும் விதப்புரை உள்ளிட்ட) ஏதேனும் முடிவினால் அல்லது விதப்புரையினால் அல்லது ஏதேனும் செயல்மூலம் அல்லது செய்யாமைமூலம் விளைவிக்கப்பட்டுள்ளதெனச் சார்த்தப்படும் அல்லது விளைவிக்கப்படும் சாத்தியமுடையதெனச் சார்த்தப்படும் அநீதியெதனையும் அத்துடன் அரசியலமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் உரிமை மீறலையும் உள்ளடக்குவதாகும்.

புலனாய்வுக்குள் அமையாத கருமங்கள்.

11. இச்சட்டத்திலுள்ளதெதுவும் ஓம்புட்சுமாறுக்கு—

(அ) அரசியலமைப்புத் தொடங்குவதற்கு முன்னர் நிகழ்ந்ததாகச் சார்த்தப்படும் அடிப்படை உரிமை மீறலொன்று பற்றிய அல்லது பிற அநீதிபற்றிய ஏதேனும் முறைப்பாட்டின்மீது அல்லது சார்த்தலின்மீது ;

(ஆ) (i) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின்கீழ் அல்லது பொதுமக்கள் பாதுகாப்புத் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலிருக்கும் சட்டத்தின்கீழ் ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித்தல், புரிதல் அல்லது நிறைவேற்றுதல் தொடர்பிலானதும் ;

(ii) அரசுக்கு, ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு, உள்ளூர் அதிகாரசபைக்கு அல்லது இவற்றையொத்த வேறு நிறுவனத்துக்குச் சட்ட ஆலோசகராகச் செயலாற்றும் அல்லது அவை சார்பில் ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் தோன்றும் (சட்டத்துறைத் தலைமையதிபதி, மன்றுடியார் தலைமையதிபதி அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதித் திணைக்களத்தைச் சேர்ந்த எவரேனும் அலுவலர் அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியின் விசேட அதிகாரத்தின் கீழ்ச் செயலாற்றும் எவரேனும் சட்டத்தரணி உள்ளிட்ட) சட்டத்தரணியொருவரின் ஏதேனும் முடிவு, விதப்புரை, செயல் அல்லது செய்யாமை தொடர்பிலானதும் ;

(iii) ஆயுதம் தாங்கிய படைகளில், பொலிசுப் படையில் அல்லது பொதுமக்கள் ஒழுங்கைப் பேணுவதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய படைகளில் உறுப்பினரொருவராக இருக்கின்ற அல்லது இருந்துள்ள எவரேனும் ஆள் தொடர்பிலான ஏதேனும் கருமம்—

(அ) அவரது சேவைகளின் நியதி நிபந்தனைகள் தொடர்பாக இருக்குமளவுக்கு ; அல்லது

(ஆ) அத்தகைய உறுப்பினர் என்னும் தன்மையில் அவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் கட்டளை, ஏவல், முடிவு, தண்டம் அல்லது தண்டனை தொடர்பாக இருக்குமளவுக்கு ;

அத்தகைய எவரேனும் ஆள் தொடர்பிலானதும் ;

(iv) குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் தொடரப்படுதல் அல்லது அவற்றை நடாத்துதல் அத்துடன், அவற்றிற்கான ஏதேனும் முடிவு அல்லது விதப்புரை தொடர்பிலானதும் ;

(v) பகிரங்க அலுவலர்களின் நியமனம், இடமாற்றம், பதவி விலக்கல் அல்லது ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு தொடர்பிலானதும் ;

(vi) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் ஏதேனும் முடிவு, விதப்புரை, செயல் அல்லது செய்யாமை தொடர்பிலானதும் ;

(vii) தேர்தல் ஆணையாளரின் ஏதேனும் முடிவு, விதப்புரை, செயல் அல்லது செய்யாமை தொடர்பிலானதும் ; அல்லது

(viii) ஒம்புட்சுமானின் அல்லது எவரேனும் பிரதி ஒம்புட்சுமானின் ஏதேனும் முடிவு, தீர்மானம், விதப்புரை, செயல் அல்லது செய்யாமை தொடர்பிலானதும்,

அடிப்படை உரிமைமீறலொன்றாக அமையாத அநீதி பற்றியதான ஏதேனும் சார்த்தல்மீது புலனாய்வு செய்து அறிக்கை செய்ய அதிகாரமளித்தல் ஆகாது.

குறித்த சில பிரச்சினைகள் உயர்நீதி மன்றத்துக்கு ஆற்றுப்படுத்தப்படுதல்.

12. (1) இச்சட்டத்தின்கீழ் புலனாய்வொன்று நடாத்தப்படுகையில்—

(அ) அரசியலமைப்பின் பொருள்கோடல் தொடர்பில் ; அல்லது

(ஆ) குறிப்பிட்ட எவையேனும் நிகழ்வுகள் தொடர்பில், பகிரங்க அலுவலரொருவரால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் உள்ளூர் அதிகாரசபையின் அல்லது இவற்றையொத்த வேறு நிறுவனத்தின் அலுவலரொருவரால் அடிப்படை உரிமையொன்று மீறப்பட்டுள்ளதா அல்லது மீறப்படுவதற்கான சாத்தியம் உளதா என்பது தொடர்பில்,

விதிவிலக்கான பொது முக்கியத்துவம் வாய்ந்த சட்டப் பிரச்சினை எதுவும் எழுமாயின், அத்தகைய பிரச்சினையின்மீது உயர்நீதிமன்றம் கருத்துத் தெரிவிப்பதற்கென ஒம்புட்சுமான், உயர்நீதிமன்றத்துக்கு வழக்கொன்றை எடுத்துக்கூறலாம்.

(2) எடுத்துக்கூறப்பட்ட வழக்கானது, சட்டப்பிரச்சினை எந்த நிகழ்வுகளின்மீது எழுகின்றதோ, அந்த நிகழ்வுகள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய நிகழ்வுகள், இப்பிரிவின்கீழ் உயர்நீதிமன்றத்தின் முன்னர் நடைபெறும் நடவடிக்கைகளில் கேள்விக்குட்படுத்தப்படுதலும் வேண்டும்.

(3) சட்டத்துறைத் தலைமையதிபதிக்கும், முறைப்பாட்டாளர் எவரேனுமிருப்பின் அவருக்கும் எடுத்துக்கூறப்பட்ட அத்தகைய ஏதேனும் வழக்கு பற்றிய அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன், அவர்கள் அத்தகைய வழக்கு பற்றிய கேட்பின்போது சமர்ப்பணங்களைச் செய்வதற்கு உரித்துடையவர்களாதலும் வேண்டும்.

(4) ஒம்புட்சுமான் அத்தகைய கேட்பின்போது சட்டத்தரணியொருவர் மூலம் சமர்ப்பணங்களைச் செய்யலாம்.

குறித்த சில விடயங்களில் ஒம்புட்சுமான், புலனாய்வைத் தொடர்ந்து நடத்தாது விடலாம்.

13. (1) (அ) புலனாய்வு செய்யப்படும் கருமம் தொடர்பில், சட்டத்தின்கீழ், அல்லது இப்போதுள்ள நிருவாக வழக்காறின்கீழ், நாடுதற்கு நியாயமானதாகவிருக்கும் அல்லது நியாயமானதாகவிருந்திருக்கும் போதுமானதொரு பரிகாரத்தை அல்லது மேன்முறையீட்டுரிமையை முறைப்பாட்டாளர் அல்லது இன்னலுற்றவர் கொண்டுள்ளார் என அல்லது கொண்டிருந்தார் என ; அல்லது

(ஆ) முறைப்பாட்டாளர், முறைப்பாட்டின் அல்லது சார்த்தலின் விடயப்பொருளில் போதிய அக்கறையைக் கொண்டிருக்கவில்லையென ; அல்லது

(இ) ஏதேனும் முறைப்பாட்டை அல்லது சார்த்தலைச் செய்வதில் முறைப்பாட்டாளர் நியாயமற்ற தாமதத்துக்குக் குற்றவாளியாகவிருக்கின்றாரென ; அல்லது

(ஈ) ஏதேனும் சர்வதேச ஒழுங்கமைப்புடனான அல்லது முகவராண்மையுடனான இலங்கையின் உறவு உட்பட, இலங்கையின் பாதுகாப்பை, ஏமத்தை அல்லது சர்வதேச உறவுகளை அத்தகைய புலனாய்வு பங்கப்படுத்தக் கூடுமென ; அல்லது

(உ) அத்தகைய புலனாய்வு ஏதேனும் மறியற்சாலையில் அல்லது தடுப்புக்காவல் இடத்தில் ஒழுக்காற்றை அல்லது ஒழுங்கமைதியைப் பேணுதலைப் பங்கப்படுத்தக்கூடுமென,

ஓம்புட்சுமான் கருதுவாரெனில், அவர், இச்சட்டத்தின்கீழ் தம்மால் தொடங்கப்பட்ட புலனாய்வொன்றைத் தொடர்ந்து நடாத்தாது விடலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தற்றுணிபைப் பிரயோகிக்கையில், ஓம்புட்சுமான் புலனாய்வொன்றைத் தொடர்ந்து நடாத்தாது விடுமிடத்து, அத்தகைய புலனாய்வைத் தொடர்ந்து நடத்தாது விடுவதற்கான அவரது முடிவையும் அதற்கான அவரது காரணங்களையும் பொது மனுக்கள் குழுவுக்கு அறிவித்தல் வேண்டும்.

**புலனாய மறுத்தல் கேள்விக்குட் படுத்தப்படு தல் ஆகாது.**

14. பதின்மூராம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனாக ஏதேனும் கருமம், தம் நியாயாதிக்கத்துள் அமையவில்லை எனும் ஏதுவின்மீது அத்தகைய கருமத்தை விடயத்துக்கேற்றாற்போல, புலனாய அல்லது மேற்கொண்டு புலனாய ஓம்புட்சுமானால் செய்யப்பட்ட மறுப்பு அல்லது 13 ஆம் பிரிவின் கீழ், தம் தற்றுணிபைப் பிரயோகிக்கையில், ஓம்புட்சுமானால் புலனாய்வொன்று தொடர்ந்து நடத்தப்படாதுவிடுதல் முற்றும் முடிவானதாதல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாய சபையில் கேள்விக்குட்படுத்தப்படுதலோ அல்லது உறுதிகேள் எழுத்தாணை, தடையீட்டெழுத்தாணை, ஆணையீட்டெழுத்தாணை, மேற்செலவெழுத்தாணை எனும் தன்மைத்தான கட்டளைகளுக்கான வழக்கு நடவடிக்கைகளில் அல்லது வேறு வகையில் மீளாயப்படுதலோ அல்லது தள்ளி வைக்கப்படுதலோ ஆகாது.

**ஓம்புட்சுமானால் புலனாய்வு நடாத்தப் படுதல்.**

15. (1) இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் கருமத்தைப் புலனாய்வதற்கு முன்னர், அத்தகைய புலனாய்வை நடத்துவதற்கான அவரது உட்கருத்தைச் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவருக்கு ஓம்புட்சுமான் அறிவிக்கலாம்.

(2) இச்சட்டத்தின்கீழ் ஓம்புட்சுமானால் நடாத்தப்பெறும் ஒவ்வொரு புலனாய்வும் அந்தரங்கமாக நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய புலனாய்வின்போது சமுகமாயிருத்தற்கு ஆளெவரும் உரிமை என்ற வகையில் உரித்துடையவராதலும் ஆகாது.

(3) ஓம்புட்சுமான் தேவையானதென அவர் கருதும் அத்தகைய எல்லா விசாரணைகளையும் நடாத்துதல் வேண்டும். ஆயினும், கேட்பு எதனையும் நடாத்துவதற்கு அவர் கடப்பாடுடையவராதல் ஆகாது. அவர், தாம் பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய ஆட்களின் சான்றைக் கேட்கலாம் அல்லது அவர்களிடமிருந்து தகவலைப் பெறலாம் அல்லது முறையீடுகளை ஏற்றுக் கவனிக்கலாம். (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஓம்புட்சுமானுக்கு சான்று அளிக்கவோ அல்லது முறையீடுகளைச் செய்யவோ, ஆளெவரும், உரிமை என்ற வகையில் உரித்துடையவராதல் ஆகாது.

(4) (அ) ஓம்புட்சுமான், அவரது புலனாய்வின்போது, எவரேனுமாளுக்கு ஏதேனும் மாறான அறிக்கையை அல்லது விதப்புரையை, அத்தகைய மாறான அறிக்கை அல்லது விதப்புரை எக்கருமம் தொடர்பானதோ அக்கருமம்பற்றி தம்பக்க வழக்கை எடுத்துரைப்பதற்கான சந்தருப்பமொன்றை அத்தகைய ஆளுக்கு அளித்திருந்தாலொழிய, செய்தல் ஆகாது.

(ஆ) ஏதேனும் புலனாய்வின்போது ஆளெவரும் வேறெவரேனும் ஆளைப் பிரதிநிதியாக வைத்திருத்தல் ஆகாது.

(இ) சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவர், ஓம்புட்சுமானுக்கு வாய்மூலமான அல்லது எழுத்துமூலமான முறையீடுகளைச் செய்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(ஈ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஓம்புட்சுமான், அவர் பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய முறையில் அவரது நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

16. (1) ஏதேனும் புலனாய்வு நோக்கங்களுக்காக, ஓம்புட்சுமான் பின்வரும் தத்துவங்களை உடையவராதல் வேண்டும். அதாவது :— சான்று.

(அ) பெறுவதற்கும் எடுத்துக்கொள்வதற்கும் அல்லது சோதிப்பதற்கும் அவசியமானது அல்லது விரும்பத்தக்கது எனக் கருதும் எழுத்து மூலமான அல்லது வாய்மொழிமூலமான அத்தகைய எல்லாச் சான்றுகளையும் பெறுவதற்கும் எடுத்துக் கொள்வதற்கும் அத்துடன் சாட்சிகளாக அத்தகைய எல்லா ஆட்களையும் சோதிப்பதற்குமான தத்துவம்;

(ஆ) சாட்சிக்காரர் நீதிமன்றத்தில் சான்று அளிப்பின் எத்தகைய தான சத்தியம் அல்லது உறுதியுரை அவரிடமிருந்து தேவைப்படுத்தப்படுமோ, அத்தகைய சத்தியத்தின்மீது அல்லது உறுதியுரையின்மீது எவராயினுஞ் சாட்சிக்காரரின் எழுத்துருவிலான அல்லது வாய்மொழிமூலமான சான்றைத் தேவைப்படுத்துவதற்கும், அத்தகைய ஒவ்வொரு சாட்சிக்கும் சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதுதற்கும் ஆன தத்துவம்;

(இ) சான்றளிப்பதற்காக அல்லது அவரது உடைமையில் அல்லது கட்டுப்பாட்டிலிருக்கும் ஏதேனும் ஆவணத்தை அல்லது பிற பொருளை முன்வைப்பதற்காக எவரேனும் ஆளைக் கட்டளையிட்டழைப்பதற்கும் சாட்சிக்காரரொருவராக அவரைச் சோதனை செய்வதற்கும் அல்லது அவரது உடைமையில் அல்லது கட்டுப்பாட்டிலிருக்கும் ஏதேனும் ஆவணத்தை அல்லது பிற பொருளை முன்வைக்குமாறு அவரைத் தேவைப்படுத்துவதற்குமான தத்துவம்;

(ஈ) மறியற்சாலைக்கு, அவதானிப்பு இல்லத்துக்கு, மனநோய் மருத்துவமனைக்கு அல்லது வேறு தடுப்புக்காவல் இடத்திற்குப் பொறுப்பாகவுள்ள எவரேனும் ஆளை, அவரது கட்டுக்காவலில் அல்லது பொறுப்பில் இருக்கும் எவரேனும் ஆளை, சோதனை செய்யும் நோக்கத்துக்காக ஒம்புட்சுமானின் முன்னர் கொணரும்படி அல்லது அத்தகைய ஆளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளைக் காண்பிக்கும்படி பணித்தற்கான தத்துவம்; அத்துடன்

(உ) சான்றுக் கட்டளைச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எது எப்படியிருப்பினும், ஆனால், இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதற்கமைய, ஒம்புட்சுமானின் அபிப்பிராயப்படி, புலனாய்வுக்கு உதவக்கூடிய எழுத்திலான அல்லது வாய்மொழி மூலமான ஏதேனும் சான்றை அனுமதிப்பதற்கான தத்துவம்.

(2) சாட்சிக்காரரொருவர் தொடர்பான அத்தகைய ஒவ்வொரு சோதனையும், தண்டனைச் சட்டக்கோவையின் XI ஆம் அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக, நீதிமுறை வழக்கு நடவடிக்கையொன்றெனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் கருமம் தொடர்பாக இரகசியத்தைப் பேணுவதற்கு அல்லது அதனை வெளிவிடுவதிநின்றும் தவிர்ந்திருத்தற்கு ஏதேனும் சிறப்புச்சட்டத்தின் ஏற்பாடுகளினால் பிணிக்கப்படும் ஆளொருவர், அத்தகைய கருமம் தொடர்பில் சான்று அல்லது தகவல் அளிப்பதன்மூலம், ஏதேனும் வினாவுக்கு மறுமொழி அளிப்பதன்மூலம் அல்லது ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளை முன்வைப்பதன் மூலம், இரகசியத்தைப் பேணுவதற்கான அல்லது அதனை வெளிவிடாதிருத்தற்கான அத்தகைய கடப்பாட்டை மீறுபவராவாரெனில், அவர் அத்தகைய சான்றை அல்லது தகவலை அளித்தலோ அல்லது அத்தகைய மறுமொழியை அளித்தலோ அல்லது அத்தகைய ஆவணத்தை அல்லது பிறபொருளை முன்வைத்தலோ ஆகாது:

ஆயின், அத்தகைய ஆளெவரும், அத்தகைய கடப்பாட்டைப் பொருட்படுத்தாது, முறைப்பாட்டாளரின் அல்லது இன்னலுற்ற ஆளின் அல்லது அத்தகைய வேறு ஆளின் முந்திய சம்மதத்துடன், முறைப்பாட்டாளர் பற்றி மட்டுமே அல்லது இன்னலுற்ற ஆள்பற்றி மட்டுமே முறைப்பாட்டாளரினால் அல்லது இன்னலுற்ற ஆளினால் அல்லது அத்தகைய வேறு எவரேனும் ஆளினால் அத்தகைய ஆளுக்குச் செய்யப்பட்ட ஏதேனும் கூற்று தொடர்பில் சான்று அல்லது தகவல் அளிக்கும்படி அல்லது ஏதேனும் வினாவுக்கு மறுமொழி அளிக்கும்படி அல்லது அத்தகைய ஆளுக்குக் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளை முன்வைக்கும்படி ஒம்புட்சுமானால் தேவைப்படுத்தப்படலாம்.

(4) (அ) விடயத்துக்கேற்றவாறு, ஏதேனும் சான்றை அல்லது தகவலை அளித்தல் அல்லது ஏதேனும் வினவுக்கு மறுமொழி அளித்தல் அல்லது ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளை முன்வைத்தலானது—

(i) இலங்கையின் பாதுகாப்பை, ஏமத்தை அல்லது (ஏதேனும் சர்வதேச ஒழுங்கமைப்புடனான அல்லது முகவராண்மையுடனான இலங்கையின் உறவுகள் உள்ளிட்ட) இலங்கையின் சர்வதேச உறவுகளைப் பங்கப்படுத்துமென அல்லது பங்கப்படுத்தும் சாத்தியம் உடையதென ;

(ii) அமைச்சரவையின் அல்லது அமைச்சரவையின் ஏதேனும் குழுவின், இரகசியத் தன்மையினவான அல்லது அந்தரங்கத் தன்மையினவான கருமங்கள் பற்றிய கலந்தாய்வுகளை அல்லது நடவடிக்கைகளை வெளிவிடுமென அல்லது வெளிவிடும் சாத்தியம் உடையதென ;

(iii) தவறுகளின் புலனாய்வை அல்லது கண்டுபிடிப்பைத் தடைசெய்யும் என அல்லது இடையூறு செய்யுமென அல்லது அவ்வாறு செய்யும் சாத்தியமுடையதென ; அல்லது

(iv) உத்தியோகபூர்வ இரகசியங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுமென அல்லது மீறும் சாத்தியமுடையதென,

சட்டத்துறைத் தலைமையதிபதி அத்தாட்சிப்படுத்துவாரெனில், ஆளெவரும் அத்தகைய ஏதேனும் சான்றை அளித்தலோ ஏதேனும் வினவுக்கு மறுமொழி அளித்தலோ, அல்லது ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளை முன்வைத்தலோ ஆகாது.

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஏதேனும் ஆவணத்தை வெளிவிடுதல் அல்லது ஏதேனும் சான்றை அல்லது தகவலை அளித்தல் அல்லது ஏதேனும் வினவுக்கு மறுமொழி அளித்தல் பொது மக்கள் நலனுக்கு ஊறு விளைவிப்பதாகும் எனும் ஏதுவின்மீது அத்தகைய ஏதேனும் ஆவணத்தைக் கொடுக்க மறுப்பதற்கு அல்லது அத்தகைய ஏதேனும் சான்றை அல்லது தகவலை அளிக்க மறுப்பதற்கு அல்லது அத்தகைய ஏதேனும் வினவுக்கு மறுமொழி அளிக்க மறுப்பதற்கு அதிகாரமளிக்கும் அல்லது தேவைப்படுத்தும் சட்டவிதியெதுவும் ஓம்புட்சுமானால் நடாத்தப்படும் ஏதேனும் புலனாய்வு தொடர்பாக ஏற்புடையதாகாது.

(5) மூன்றும், (4) ஆம் உட்பிரிவுகளில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, சான்று அல்லது தகவல் அளித்தல், வினவுக்கு மறுமொழி அளித்தல், ஆவணங்களையும் வேறு பொருட்களையும் முன்வைத்தல் என்பன தொடர்பாக, ஆள் ஒவ்வொருவரும், நீதிமன்றமொன்றில் சாட்சிக்காரரொருவராக இருந்து சான்று அளிப்பின், அவருக்கு உரித்துடையனவாகும் அதே சிறப்புரிமைகளையும், விடுபாட்டுரிமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) (அ) ஓம்புட்சுமானுக்கு அல்லது ஓம்புட்சுமான் முன்னர் அளிக்கப்பட்ட ஏதேனும் சான்று, தகவல் அல்லது மறுமொழி தொடர்பில் அல்லது முன்வைக்கப்பட்ட ஏதேனும் ஆவணம் அல்லது வேறு பொருள் தொடர்

பில் ஆளெவரும், ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் ஏதேனும் வழக்குக்கு, குற்ற வழக்குக்கு அல்லது வேறு குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைக்கு ஆளாதலாகாது.

(ஆ) ஓம்புட்சுமானுக்கு அல்லது ஓம்புட்சுமான் முன்னர் எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட கூற்றொன்று பற்றிய அல்லது அளிக்கப்பட்ட மறுமொழி பற்றிய சான்றெதுவும், ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில், ஏதேனும் வழக்கில், குற்றவழக்கில் அல்லது வேறு குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கையில் அத்தகைய ஆளுக்கு எதிராக அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு எதிராக ஏலத்தக்கதாதலாகாது.

(இ) இச்சட்டத்தின் கீழான புலனாய்வொன்றின்போது, அல்லது புலனாய்வின் நோக்கங்களுக்காக, ஓம்புட்சுமானுக்கு அல்லது அவரது அலுவலர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதும் அல்லது ஓம்புட்சுமானால் அல்லது அவரது அலுவலர்களால் அனுப்பி வைக்கப்பட்டதும், புலனாய்வு நோக்கங்களுக்கெனக் குறிப்பாகத் தயாரிக்கப்பட்டதுமான ஏதேனும் ஆவணம் பற்றிய சான்று எதுவும், ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கை எதிலும் சான்றாக ஏலத்தக்கதாதல் ஆகாது :

ஆயின், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள எதுவும்—

(i) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் தண்டனைச் சட்டக்கோவையின் XI ஆம் அத்தியாயத்தின் கீழான ஏதேனும் தவறுக்கான அல்லது 20 ஆம் பிரிவின் கீழான ஏதேனும் தவறுக்கான அல்லது இச்சட்டத்தின் கீழ் இரகசியத்தைப் பேணுதற்கான அல்லது வெளிவிடாதிருத்தற்கான அவரது கடப்பாட்டை மீறியமைக்கான ஏதேனும் வழக்குக்கு, குற்றவழக்குக்கு அல்லது தண்டத்திற்கு ஆளெவரும் ஆளாகுந்தன்மையைக் குறைத்தலோ பாதித்தலோ குறைக்கின்றதெனஅல்லது பாதிக்கின்றதென கருதப்படுதலோ, பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது ; அல்லது

(ii) அத்தகைய ஏதேனும் வழக்கின் அல்லது குற்றவழக்கின் நோக்கங்களுக்காக எவரேனும் ஆளினது சான்றின் தன்மையை அல்லது சான்றின் ஏதேனும் பகுதியை வெளியிடுதலை அல்லது வெளிவிடுதலைத் தடைசெய்தலாகாது அல்லது தடைசெய்கின்றதெனக் கருதப்படுதலோ பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது.

ஓம்புட்சுமானின் தீர்மானங்கள்.

17. (1) புலனாய்வு முடிவுற்றதன்மீது, ஓம்புட்சுமான், புலனாய்வின் விடயப்பொருளாயிருந்த ஏதேனும் முடிவு, விதப்புரை, செயல், அல்லது செய்யாமை—

(i) சட்டத்துக்கு முரணானதா ;

(ii) நிகழ்வுப் பிழையின் மீது அல்லது சட்டப்பிழையின் மீது முற்றாக அல்லது பகுதியளவில் அமைந்துள்ளதா ;

(iii) நியாயமற்றதா, நீதியற்றதா அடக்குமுறையானதா, தகாத முறையில் ஓரங்காட்டப்பட்டதா அல்லது வேறு வகையில் தவறானதா ;

(iv) நியாயமற்றதாக, நீதியற்றதாக, அடக்குமுறையானதாக அல்லது தகாதமுறையில் ஓரங்காட்டப்பட்டதாக இருக்கின்ற அல்லது இருக்கக்கூடியதோர் வழக்காறுக்கிணங்கியதா ; அல்லது

(v) தற்றுணிபொன்று—

(அ) தகாத நோக்கமொன்றுக்காக பிரயோகிக்கப்பட்டிருப்பின், அல்லது இயைபில்லாத ஏதுக்களின் மீது அல்லது இயைபில்லாத கருதுகோள்களைத் தொடர்புறுத்திப் பார்ப்பதன் மூலம் பிரயோகிக்கப்பட்டிருப்பின், அல்லது முக்கிய கருதுகோள்களைக் கருத்திற்கெடுக்கத் தவறியதன் மூலம் பிரயோகிக்கப்பட்டிருப்பின் ; அத்துடன்

(ஆ) ஓம்புட்சுமானின் அபிப்பிராயத்தில், காரணம் அளிக்கப்பட்டு இருந்திருக்க வேண்டியதாக இருந்தபோதிலும், காரணம் அளிக்கப்படாதிருப்பின்,

அத்தகைய தற்றுணிபை பிரயோகிக்கையில் செய்யப்பட்டதா அல்லது புரியப்பட்டதா ; அல்லது

(vi) நியாயமற்றவகையில் தாமதப்படுத்தப்பட்டதா,

எனும் வினை உட்பட அடிப்படை உரிமையொன்று மீறப்பட்டிருக்கின்றதா அல்லது மீறப்படும் சாத்தியமுளதா என்பது பற்றியும் வேறேதேனும் அநீதி ஏற்பட்டிருக்கின்றதா அல்லது ஏற்படும் சாத்தியம் உள்ளதா என்பது பற்றியும் தீர்மானித்தல் வேண்டும். அத்துடன் அந்தத் தீர்மானத்தை அதற்கான காரணங்களுடன் சேர்த்து பொதுமனுக்கள் குழுவுக்கு அறிக்கை செய்தல் வேண்டும் என்பதுடன்—

(i) கருமம் மீளச்சீர்தூக்கிப்பார்க்கப்படவேண்டும் என ;

(ii) செய்யாமை சீராக்கப்படவேண்டும் என ;

(iii) முடிவு இல்லாதாக்கப்படவேண்டுமென அல்லது வேறுபடுத்தப்படவேண்டுமென ;

(iv) அத்தகைய முடிவு, விதப்புரை, செயல் அல்லது செய்யாமை எந்த வழக்காறினை அடிப்படையாகக் கொண்டதோ அந்த வழக்காறு மாற்றப்படவேண்டுமென ;

(v) அத்தகைய முடிவுக்கான, விதப்புரைக்கான, செயலுக்கான அல்லது செய்யாமைக்கான காரணங்கள் தரப்படவேண்டுமென,

விதந்துரைக்கலாம்.

(2) பொதுமனுக்கள் குழுவானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஓம்புட்சுமானால் அதற்குச் செய்யப்பட்ட அறிக்கையொன்றைச் சீர்தூக்கிப் பார்த்தபின்னர், ஓம்புட்சுமானின் அறிக்கைமீது எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை பற்றிய அதன் கருத்தை பற்றி பாராளுமன்றத்திற்கு அறிக்கை செய்யலாம்.

## பாகம் IV

### பொது

ஒம்புட்சுமானால் செய்யப்படும் ஆண்டு அறிக்கை.

18. ஒம்புட்சுமான் ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டுக்கும் குறைந்தது ஒரு முறையெனினும், இச்சட்டத்தின்கீழ், அவரது தத்துவங்களை, கடமைகளை, பணிகளைப் பிரயோகிக்கையிலும், புரிகையிலும், நிறைவேற்றுகையிலும் முற்போந்த பஞ்சாங்க ஆண்டின்போது, ஆற்றப்பட்ட வேலை பற்றிய அறிக்கையொன்றைச் சனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்கும் அனுப்புதல் வேண்டும்.

வளவுகளுள் பிரவேசிப்பதற்கான தத்துவம்.

19. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஒம்புட்சுமான் ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தால், பகிரங்கக் கூட்டுத்தாபனத்தால், உள்ளூர் அதிகாரசபையால் அல்லது இவற்றையொத்த வேறு நிறுவனத்தால் பயன்படுத்தப்படும் அல்லது இருப்பாட்சி செய்யப்படும் எவையேனும் வளவுகளுள் அல்லது ஏதேனும் இடத்தினுள், எக்காலத்திலாயினும் பகலில் அல்லது இரவில் ஏதேனும் நியாயமான நேரத்தில் பிரவேசித்து, அத்தகைய வளவுகளையும் அல்லது இடத்தையும் அப்போதைக்கு ஆங்குள்ள ஏதேனும் பொருளையும் பார்வையிடலாம் என்பதுடன், 15 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, அங்கு அவரது நியாயாதிக்கத்துக்குட்பட்ட ஏதேனும் புலனாய்வையும் நடாத்தலாம்.

(2) அத்தகைய எவையேனும் வளவுகளுள் அல்லது ஏதேனும் இடத்தினுள் பிரவேசிக்குமுன்னர், ஒம்புட்சுமான் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவருக்கு அறிவித்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் உள்ள எதுவும், உத்தியோகபூர்வ இரகசியங்கள் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் தடை செய்யப்பட்ட இடமாகவுள்ள எவையேனும் வளவுகளினுள் அல்லது ஏதேனும் இடத்தினுள் கப்பலினுள் அல்லது வானூர்தியினுள் ஒம்புட்சுமானோ அல்லது வேறு எவரேனும் ஆளோ நுழைவதற்கு அதிகாரமளித்தல் ஆகாது.

தவறுகள்.

20. (1) (i) நியாயமான காரணமின்றி, இச்சட்டத்தின்கீழ் சேர்ப்பிக்கப்பட்ட அழைப்புக் கட்டளையிற் கூறப்பட்ட நேரத்திலும் இடத்திலும் ஒம்புட்சுமானுக்கு முன்னர் தோன்றத் தவறும்;

(ii) சத்தியத்தைச் செய்வதற்கு அல்லது உறுதியுரையை மொழிவதற்கு மறுக்கும் அல்லது உரியமுறையில் சத்தியம் செய்தபின் அல்லது உறுதியுரை மொழிந்த பின், நியாயமான காரணமின்றி, ஒம்புட்சுமானால் புலனாயப்படும் கருமங்களையிட்டுக் கேட்கப்படும் ஏதேனும் வினாவுக்கு மறுமொழியிறுக்க மறுக்கும் அல்லது தவறும்;

(iii) நியாயமான காரணமின்றி, தமது உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ளதும், புலனாய்வின் நோக்கங்களுக்காகக் காண்பிக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டதுமான ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளை ஒம்புட்சுமானுக்கு முன்வைக்கவும் காண்பிக்கவும் மறுக்கும் அல்லது தவறும்;

(iv) இச்சட்டத்தின் கீழான புலனாய்வொன்றின் நோக்கங்களுக்காக ஓம்புட்சுமானுக்கு அல்லது அவாது பணியாட்டொகுதியின் வேறெவரேனும் அலுவலருக்கு வேண்டுமென்று பொய்க்கூற்று எதனையும் அளிக்கும்;

(v) ஓம்புட்சுமான் அல்லது அவாது பணியாட்டொகுதியின் வேறெவரேனும் அலுவலர் இச்சட்டத்தின் கீழான அவாது கடமைகளையும் பணிகளையும் புரியும்போதும் நிறைவேற்றும்போதும் நியாயமான காரணமின்றி, அவர்களைத் தடுக்கும்;

(vi) இச்சட்டத்தின்கீழ் இரகசியத்தைப் பேணுவதற்கான கடமையை மீறிச் செயலாற்றும்;

(vii) இச்சட்டத்தின்கீழ் ஓம்புட்சுமான் ஏதேனும் புலனாய்வைச் செய்கையில் அல்லது விசாரணையை நடாத்துகையில் ஓம்புட்சுமானுக்கு ஏதேனும் அவதூறை முன்னி ஏற்படுத்தும் அல்லது ஏதேனும் இடையீட்டை முன்னி ஏற்படுத்தும்; அல்லது

(viii) ஓம்புட்சுமானை அவமரியாதைக்குள்ளாக்கும் நோக்குடன், மொழியப்பட்ட சொற்களால் அல்லது வாசிக்கப்படுவதற்கென முன்னப்பட்ட சொற்களால் ஏதேனும் கூற்றைச் செய்கின்ற அல்லது வெளியிடுகின்ற அல்லது வேறேதேனும் செயலைச் செய்கின்ற,

எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், மேல்நீதிமன்றத்தால் யூரர்சபை இல்லாத விளக்கமொன்றன் பின்னர், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஓர் ஆண்டுக்கு மேற்படாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (i) ஆம் அல்லது (ii) ஆம் அல்லது (iii) ஆம் அல்லது (v) ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட தவறொன்றுக்கான குற்றவழக்கொன்றில், எவரேனும் ஆளுக்குச் சேர்ப்பிக்கப்பட்ட அழைப்புக்கட்டளையில் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும், நியாயமான காரணமின்றி ஓம்புட்சுமான் முன்னர் தோன்றத் தவறியுள்ளார் என அல்லது ஓம்புட்சுமானால் புலனாயப்படும் கருமங்கள் சம்பந்தமாக அவரிடம் கேட்கப்பட்ட ஏதேனும் வினாவுக்கு மறுமொழி அளிக்க நியாயமான காரணமின்றி மறுத்துள்ளார் என, அல்லது அவாது உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் இருப்பதும், ஓம்புட்சுமானால் செய்யப்படும் புலனாய்வு நோக்கங்களுக்கு அவசியமானதுமான ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளை நியாயமான காரணமின்றி ஓம்புட்சுமானுக்குக் கொடுக்க மறுத்துள்ளார் என அல்லது தவறியுள்ளார் என அல்லது ஓம்புட்சுமான் அல்லது அவாது பணியாட்டொகுதியைச் சேர்ந்த வேறு எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் இச்சட்டத்தின் கீழான அவாது தத்துவங்களைப் பிரயோகிக்கும்போது கடமைகளைப் புரியும்போதும் பணிகளை நிறைவேற்றும்போதும் நியாயமான காரணமின்றி அவரைத் தடுத்துள்ளார் எனப் புலன்பட அமைந்ததும், ஓம்புட்சுமானின் கைட்

பட்டதுமான சான்றிதழொன்று, சான்றளிக்கப்படும்போது, அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகளுக்கான முதற்றோற்றச் சான்றாக ஏற்றுக்கொள்ளப் படுதலும் வேண்டும்.

(3) இப்பிரிவிலும் 21 ஆம் பிரிவிலும் "ஓம்புட்சுமான்" என்னும் சொல்லமைப்பு பிரதி ஓம்புட்சுமான் ஒருவரையும் உள்ளடக்கும்.

துடர்ச்சிக்கு அல்லது குற்ற வழக்குக் கெதிரான பாதுகாப்பு.

21. (1) இச்சட்டத்தின்கீழ், ஓம்புட்சுமானால் அல்லது அவரது பணியாட்டொகுதியின் எவரேனும் அலுவலரால் நல்லெண்ணத்துடன் புரியப்படும் அல்லது புரியப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செய்லுக்காக ஓம்புட்சுமானுக்கு அல்லது அத்தகைய அலுவலருக்கு எதிராக துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் அமைதலாகாது.

(2) இச்சட்டத்தின்கீழ் ஓம்புட்சுமானால் செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கை தொடர்பிலோ அல்லது வேறு எவரேனும் ஆளினால் அத்தகைய அறிக்கையின் பொருளளவிலான உண்மைக் கணக்கொன்று வெளியிடப்பட்டமை தொடர்பில், அத்தகைய ஆளுக்கெதிராகவோ, ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நீதிசார் தன்மையினவான எவையேனும் நடவடிக்கைகளில் சான்றளிக்கும்படி ஓம்புட்சுமானோ அல்லது அவரது பணியாட்டொகுதியின் எவரேனும் அலுவலரோ அழைக்கப்படுதல் ஆகாது.

(3) இச்சட்டத்தின்கீழ் ஓம்புட்சுமானால் செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கை தொடர்பில் ஓம்புட்சுமானுக்கு எதிராகவோ, அல்லது அத்தகைய அறிக்கை பற்றி பொருளளவிலான உண்மை விளக்கமொன்றை வேறு எவரேனும் ஆள் வெளியிட்டமை தொடர்பில் அத்தகைய வேறு ஆளுக்கு எதிராகவோ, ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில், வழக்கெதுவும், குற்ற வழக்கெதுவும் அல்லது வேறு குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது.

விதிகள்.

22. (1) ஓம்புட்சுமானுக்கு முன்னர் தோன்றும் எவரேனும் சாட்சிக்காரரால் நியாயமாக உறப்பட்டிருக்கக்கூடியவாறான பிரயாணச் செலவுத்தொகையும் வேறு செலவுகளும் தொடர்பாக அமைச்சர் ஓம்புட்சுமானின் கலந்தாலோசனையுடன் விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வொரு விதியும் கசற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், கசற்றில் வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது அந்த விதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பின்னைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும், கசற்றில் வெளியிடப்பட்டபின்னர் வசதியான அளவு விரைவில், அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய விதி எதுவும், அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால், அதன் கீழ் அதன்முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். அவ்வாறு விதியொன்று ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு கசற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

23. பதினோராம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர் நிகழ்ந்ததெனச் சார்த்தப்படுகின்ற அடிப்படையுரிமையொன்றின் மீறல் பற்றிய அல்லது வேறு அநீதி பற்றிய ஏதேனும் முறைப்பாட்டை அல்லது சார்த்தலை ஒம்புட்சுமான் புலனாய்வு செய்யலாம். இச்சட்டம் நடைமுறைக்கு வருமுன்னர் நிகழ்ந்த கருமங்கள் தொடர்பான முறைப்பாடுகள்.

24. வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின் அல்லது ஏதேனும் சட்ட விதியின் ஏற்பாடுகளின் கீழ் எவரேனும் ஆளுக்கு ஏதேனும் பரிகாரம் அல்லது மேன்முறையீட்டுரிமை அல்லது ஆட்சேபிக்குமுரிமை ஏற்பாடு செய்யப்பட்டிருக்குமிடத்து அல்லது ஏதேனும் கருமத்தை விசாரணை செய்வதற்கு அல்லது புலனாய்வு செய்வதற்கு ஏதேனும் நடவடிக்கை முறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவிடத்து, அவ்வேற்பாடுகளுக்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலதிகமானவையாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்திலுள்ள எதுவும் மேற்சொல்லப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் பரிகாரத்தை நாடுவதை அல்லது மேன்முறையீட்டுரிமையை அல்லது ஆட்சேபிக்குமுரிமையை அல்லது நடவடிக்கை முறையை வரையறுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது. பேணல்கள்.

25. (1) இந்தச் சட்டத்தில் சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய— பொருள்கோடல்.

"நிறுவனத்தின் தலைவர்" என்பது—

(அ) ஓர் அரசாங்கத் திணைக்களத்தில் சேவையாற்றும் ஒரு பகிரங்க அலுவலர் தொடர்பில், அந்தத் திணைக்களத்தின் தலைவர் என்று பொருளாகும்; அல்லது அத்தகைய பகிரங்க அலுவலர், திணைக்களமொன்றின் தலைவராயிருக்குமிடத்து, அந்தத் திணைக்களம் எந்த அமைச்சுக்குக் குறித்தொதுக்கப்பட்டதோ அந்த அமைச்சின் செயலாளர் என்று பொருளாகும்;

(ஆ) ஓர் அமைச்சில் சேவையாற்றும் ஒரு பகிரங்க அலுவலர் தொடர்பில் அவ்வமைச்சின் செயலாளர் என்று பொருளாகும்; அல்லது அத்தகைய பகிரங்க அலுவலர் செயலாளராயிருக்குமிடத்து, அவ்வமைச்சுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் என்று பொருளாகும்;

(இ) அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர் ஒருவர் தொடர்பில் அரசியலமைப்பின் 112 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட நீதிச் சேவை ஆணைக்குழு எனப் பொருளாகும்;

(ஈ) வேறெவரேனும் பகிரங்க அலுவலர் தொடர்பில் எந்தப் பிரதான நிறைவேற்று அலுவலரின் பொறுப்பணிப்பின் கீழ் அல்லது கட்டுப்பாட்டின்கீழ் அந்த பகிரங்க அலுவலர் சேவையாற்றுகின்றாரோ, அந்த பிரதான நிறைவேற்று அலுவலர் என்று பொருளாகும்;

(உ) பகிரங்கக் கூட்டுத்தாபனம், உள்ளூர் அதிகாரசபை அல்லது இவற்றையொத்த வேறு நிறுவனம் ஒன்றன் ஓர் அலுவலர் தொடர்பில், அந்தப் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின், உள்ளூர் அதிகாரசபையின் அல்லது இவற்றையொத்த வேறு நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலர் என்று பொருளாகும்; அல்லது அத்தகைய அலுவலர் அந்தப் பகிரங்கக் கூட்டுத்தாப

னத்தின், உள்ளூர் அதிகாரசபையின் அல்லது இவற்றையொத்த வேறு நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருக்குமிடத்து, அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனம், உள்ளூர் அதிகாரசபை அல்லது இவற்றையொத்த வேறு நிறுவனம் எவ்வமைச்சின்கீழ் பணிபுரிகின்றதோ அவ்வமைச்சின் செயலாளர் என்று பொருளாகும்;

"உள்ளூரதிகாரசபை" என்பது, ஏதேனும் அபிவிருத்திச்சபை, மாநகரசபை, நகரசபை, பட்டினசபை அல்லது கிராமச்சபை எனப் பொருளாவதுடன், அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக்கப்படும் தத்துவங்களையும் நிறைவேற்றப்படும் பணிகளையும் புரியப்படும் கடமைகளையும் நேரொத்த அல்லது அவை போன்ற தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கெனவும் பணிகளை நிறைவேற்றுவதற்கெனவும் கடமைகளைப் புரிவதற்கெனவும் ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகார சபையையும் உள்ளடக்கும்;

"அலுவலர்" என்பது, ஊழியர் ஒருவரை அல்லது சேவையாளர் ஒருவரை உள்ளடக்கும்;

"ஓம்புட்சுமான்" என்பது, பிரதி ஓம்புட்சுமான் ஒருவரையும் அத்துடன் 8 ஆம், 9 ஆம் பிரிவின் கீழ் ஓம்புட்சுமானால் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பின்கீழ் ஓம்புட்சுமானின் ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை பிரயோகிக்கின்றவரும், புரிகின்றவரும் நிறைவேற்றுகின்றவரும் ஓம்புட்சுமானின் பணியாட்டொகுதியைச் சேர்ந்தவருமான வேறு எவரேனும் அலுவலரையும் உள்ளடக்கும்;

"சனாதிபதி" என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி என்று பொருளாகும்;

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, கம்பெனிகள் கட்டளைச் சட்டம் தவிர்ந்த எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டுள்ளதும் அல்லது தாபிக்கப்படுவதும் கொடையென்ற வகையில், கடன் என்ற வகையில் அல்லது வேறு வகையில் அரசாங்கத்தினால் முழுக்க அல்லது பகுதியளவில் உதவப்பட்ட மூலதனத்தை அல்லது நிதியை உடையதுமான ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு எனப் பொருளாகும்;

"பகிரங்க அலுவலர்" என்பது, நீதித்துறை அலுவலர் ஒருவர் அல்லாதவரும், குடியரசின் கீழ் சம்பளத்திற்காக ஏதேனும் பதவி வகிப்பவருமான ஆள் எனப் பொருளாகும்; ஆனால் அது பின்வருவோரை உள்ளடக்காது; அதாவது—

(அ) சனாதிபதியை;

(ஆ) சபாநாயகரை;

(இ) அமைச்சர் ஒருவரை;

(ஈ) நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவரை ;

(உ) பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவரை ;

(ஊ) பிரதியமைச்சர் ஒருவரை ;

(எ) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை ;

(ஏ) பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்தை ;

(ஐ) சனாதிபதியின் பணியாட்டொகுதியின் உறுப்பினர் ஒருவரை ;

(ஒ) பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியின் எவரேனும் உறுப்பினரை,

உள்ளடக்காது.

(2) இந்தச் சட்டத்தில் "அலுவலர்" என்னும் சொல் இவற்றையொத்த வேறு ஏதேனும் நிறுவனம் தொடர்பில் பயன்படுத்தப்படும் பொழுது, பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகளிலிருந்து ஏதேனும் ஊதியத்தை, படியை அல்லது வேறு நன்மையைப் பெறுகின்றவரும், ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நிறுவனமொன்றைச் சேர்ந்தவருமான அலுவலர் எனப் பொருளாகும் என்பதுடன், 1971 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தொழிற் பொறுப்பு முயற்சிகள் (கொள்ளல்) சட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்குரித்தாக்கப்பட்டுள்ள அல்லது உரித்தாக்கப்படக்கூடிய அல்லது அரசாங்கத்தினால் கொள்ளப்பட்ட அல்லது கொள்ளப்படக்கூடிய ஏதேனும் தொழிற் பொறுப்புமுயற்சியில் உள்ள ஒரு அலுவலரையும் உள்ளடக்கும் ; அத்துடன் அதற்கிணங்க, "இவற்றையொத்த வேறு நிறுவனம்" என்பது பற்றிய குறிப்பீடு எதுவும் அத்தகைய அலுவலர் எந்த நிறுவனத்தைச் சேர்ந்தவரோ அந்த ஏதேனும் நிறுவனம் என்று பொருளாகும்.

## அட்டவணை

(5 ஆம் பிரிவு)

"..........................................................ஆகிய நான், ஓம்புட்சுமான்/பிரதி ஓம்புட்சுமான் என்ற பதவிக்கான கடமைகளையும் பணிகளையும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கும் சட்டத்துக்கும் இணங்கப் பற்றுறுதியோடு புரிவேன் என்றும், நிறைவேற்றுவேன் என்றும், இலங்கைக் குடியரசுக்கு விசுவாசமுள்ளவனாக இருப்பேன் என்றும், எனது திறமைக்கு இயன்றவரை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பை உறுதியாகப் போற்றிக் காப்பேன் என்றும் பயபக்தியுடன் வெளிப்படுத்தி உறுதிசெய்கின்றேன்/சத்தியஞ்செய்கிறேன்.".

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 30 ; (வெளிநாடு) ரூபா 40 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.